
# திராவிடத்தால் வாழ்கிறோம்

**1196**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## கழகம் கண்ட சட்டப் போராட்டங்கள்

**தமிழ்.கா.அமுதரசன்**

**56**

கழகம் நடத்திய உயிர்ப்புமிக்க சட்டப் போராட்டங்களை உணர்வுபூர்வமாக விவரிக்கும் தொடர்!

# இராணி மேரி கல்லூரி வழக்கு!

# போராட்டமும் வழிகாட்டலும் என்றும் தொடரும்!



கடலோரங்களில், ரூ.5 கோடிக்கும் மேலான மதிப்பீட்டில் கட்டடங்கள் கட்டுவதைத் தடுக்கவும், பாரம்பரியக் கட்டடங்களை இடிப்பதைத் தடுத்தும், அன்றைய ஒன்றியச் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் டி.ஆர்.பாலு பிறப்பித்த உத்தரவு காரணமாக, இராணி மேரி கல்லூரியை இடிக்க முடியாத நிலை ஏற்பட்டது. அந்த உத்தரவை எதிர்த்து, சென்னை உயர் நீதிமன்றத்தில் தமிழக அரசு தொடர்ந்த வழக்கில் நீதிபதி சதாசிவம், டி.ஆர்.பாலு அவர்களின் உத்தரவுக்குத் தடைவிதித்தார்.

இதை எதிர்த்து சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் சார்பில், 'இந்த வழக்கை நீதிமன்றத்தின் சுற்றுச்சூழல் பிரிவு டிவிஷன் பெஞ்ச்தான் விசாரிக்க வேண்டும், தனி நீதிபதி இதில் உத்தரவு எதையும் பிறப்பிக்க முடியாது. எனவே, நீதிபதி சதாசிவத்தின் உத்தரவை ரத்து செய்ய வேண்டும்' என்று உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது. இதை விசாரித்த நீதிபதி பாலசுப்பிரமணியம், நீதிபதி இப்ராகிம் கலீபுல்லா ஆகியோர் அடங்கிய கோடை விடுமுறைக்கால அமர்வு, சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் உத்தரவுக்கு நீதிபதி சதாசிவம் விதித்த தடையை நீக்கினர். இதனால், ராணி மேரி கல்லூரியை இடிக்கத் தடை ஏற்பட்டது.

அந்த உத்தரவை எதிர்த்தும் அம்மையார் அரசு, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில், உயர் நீதிமன்றத்துக்குச் சென்றது. வழக்கை, தலைமை நீதிபதி சுபாஷன் ரெட்டி, நீதிபதி கோவிந்தராஜன் ஆகியோர் அடங்கிய அமர்வு விசாரித்தது.

தமிழ்நாடு அரசின் சார்பில் வாதிட்ட அன்றையத் தலைமை வழக்கறிஞர் என்.ஆர்.சந்திரன், 'கடலோர கட்டட வரையறைச் சட்டம் ஒன்றிய அரசு பிறப்பித்த உத்தரவு அல்ல. தனிப்பட்ட முறையில், சுற்றுச்சூழல் துறை அமைச்சர் டி.ஆர்.பாலு பிறப்பித்த உத்தரவு. இராணி மேரி கல்லூரி இடிப்பு தொடர்பாக, அவர் பொதுக்கூட்டங்களில் பேசிய பேச்சுகளின் அடிப்படையில் உத்தரவு வெளியிட்டுள்ளார். எனவே, டி.ஆர்.பாலு அவர்களின் உத்தரவு, அரசியல் உள்நோக்கம் கொண்டது' என வாதிட்டார்.

### ஒன்றிய அரசின் அதிகாரம்

ஒன்றிய சுற்றுச்சூழல் துறையின் சார்பில், மூத்த வழக்கறிஞர் ஹரீஷ் சால்வே வாதாடினார். 'இந்த விவகாரம் ஒன்றிய அரசுக்கும் மாநில அரசுக்கும் இடையிலான பிரச்சினை. அரசியல் சட்டத்தின் 131-வது பிரிவின்படி, இதுபோன்ற வழக்கை உச்ச நீதிமன்றம்தான் விசாரிக்க முடியும். தவிர, ஒன்றிய சுற்றுச்சூழல் துறை அரசியல் ரீதியில் எந்த அறிவிப்பையும் வெளியிடவில்லை.

கடலோரக் கட்டடங்களை ஒழுங்குபடுத்தவே இந்த உத்தரவைப் பிறப்பித்தது. இதில் எந்தத் தவறும் இல்லை. குறிப்பாக, இதுபோன்ற அறிவிப்பினை வெளியிட ஒன்றிய அரசுக்கு முழு உரிமை உண்டு. உத்தரவை வெளியிடும் முன் மாநில அரசுகளுக்கு நோட்டீஸ் அனுப்பக்கூடத் தேவையில்லை. எனவே, எங்களுக்கு நோட்டீஸ் அனுப்பவில்லை என்று சொல்லிக்கூட மாநில அரசுகள் வழக்குப் போட முடியாது. ஒன்றிய அரசுக்கு முழு அதிகாரம் உண்டு.

ஒன்றிய சுற்றுச்சூழல் துறை தமிழ்நாட்டுக்கு மட்டும் இந்த உத்தரவைப் பிறப்பிக்கவில்லை, இந்தியா முழுமைக்கும் இது பொருந்தும். ஒன்றிய அமைச்சர் வேறு கட்சியைச் சேர்ந்தவர் என்பதால், அவர் மாநில அரசின் முடிவுக்கு எதிராகச் செயல்படுவதாகக் கூற முடியாது. ஒன்றிய - மாநில அரசு மோதலை அரசியலாக்கும் இதுபோன்ற மனுக்களை நீதிமன்றம் ஊக்குவிக்கக் கூடாது என உயர் நீதிமன்றத் தலைமை அமர்வில் விரிவான விளக்கம் அளித்தார்.

இந்த வழக்குகளின் விசாரணை நிலையிலேயே அம்மையார் ஜெயலலிதா, சட்டமன்றத்திலேயே இராணி மேரி கல்லூரியை இடித்துவிட்டு, தலைமைச் செயலகம் கட்டப்பட மாட்டாது என அறிவித்து, தனது முடிவிலிருந்து பின் வாங்கி இருந்தார். இந்த நிலையில், ஒத்திவைக்கப்பட்ட வழக்கின் இறுதித்தீர்ப்பு 2006-ஆம் ஆண்டில் வெளியானது. அந்தத் தீர்ப்பு, இராணி மேரி கல்லூரி இடிப்பு தொடர்பான அனைத்து வழக்குகளையும் கட்டுப்படுத்தியது.

"இராணி மேரி கல்லூரி இடிப்பது குறித்த மனுதாரர்களின் உடனடி அச்சம் தணிந்துவிட்டது. இத்தகைய மாறிய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, இந்த விவகாரத்தில் எந்தவொரு குறிப்பிட்ட மேல்முறையீடு அல்லது உத்தரவையும் பிறப்பிக்க வேண்டிய அவசியமில்லை. மேற்கூறிய அவதானங்களுக்கு உட்பட்டு, 2003-ஆம் ஆண்டின் மேல்முறையீட்டு மனு 10,937 மற்றும் 11,076 ஆகியவை முடித்து வைக்கப்படுகின்றன. மேல்முறையீட்டு மனு 2003/15,518 திரும்பப் பெறப்பட்டதாகக் கருதி, தள்ளுபடி செய்யப்படுகிறது. மற்றும் 2003/2079 கொண்ட மனு பயனற்றதாகக் கருதி, தள்ளுபடி செய்யப்படுகிறது" என்று அனைத்து வழக்குகளையும் முடித்து வைத்தது நீதிமன்றம். இதன்மூலம் அன்றைய அச்சம் நீங்கியது மட்டுமல்ல; அந்த இடத்தை வேறு நோக்கத்துக்குப் பயன்படுத்த முடியாத சட்டப் பாதுகாப்பையும் பெற்றுக்கொடுத்தது கழகம்.

### பின்வாங்கிய காட்டு தர்பார்

அன்றையச் சூழலில் அம்மையாரின் காட்டு தர்பாரில், அவர் எடுத்த முடிவுகளில், அவரைப் பின்வாங்கவைத்த நிகழ்வு என்றால் இராணி மேரி கல்லூரிப் போராட்டம்தான். அந்தப் போராட்டத்தில் அம்மையாரின் முடிவுக்கு எதிராகப் போராடி கைது செய்யப்பட்டு சிறை சென்றவர், இன்றைய கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள். அவரது கைதும், மாணவிகளும், பேராசிரியைகளும் காட்டிய உறுதியும், கழகத்தின் சட்டப் போராட்டங்களும் அம்மையார் அரசினை உலுக்கியதுதான் அவரது பின்வாங்கலுக்குக் காரணமாக இருந்தது.

அதற்குப் பின்னும் அந்தக் கல்லூரிக்குத் தேவையான வசதிகளைத் தங்களது ஆட்சிக் காலத்தில் பார்த்துப்பார்த்து செய்தனர் முத்தமிழறிஞர் கலைஞரும் இன்றைய கழகத் தலைவர் திராவிட மாடல் நாயகர் அவர்களும். 2006-ஆம் ஆண்டு காலகட்டத்தில் கல்லூரிக்குச் சுற்றுச்சுவர் எழுப்பி, 'கலைஞர் மாளிகை' எனப் புதிய வகுப்பறைக் கட்டடத்தைக் கட்டி வழங்கினார் கலைஞர்.

2021-26 ஆட்சிக்காலத்தில் அந்தக் கல்லூரி வளாகத்திலேயே, ஏழு அடுக்குகளைக் கொண்ட 400-க்கும் மேற்பட்ட மாணவிகள் தங்கிப் பயிலும் வகையில், உயர் சிறப்பான மகளிர் விடுதியினைக் கட்டி, மாணவிகளின் நீண்டநாள் கோரிக்கையை நிறைவேற்றியது, கலைஞர் வழி வந்த திராவிட மாடல் அரசு. "மாணவிகள் பட்டம் பல பெற்றாலும் படிப்பைக் கைவிடக் கூடாது" என்று 2022-ஆம் ஆண்டு இராணி மேரி கல்லூரி பட்டமளிப்பு விழாவில், முதலமைச்சராக இருந்து மாணவிகளுக்கு வழிகாட்டினார் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின். அவரது போராட்டமும் வழிகாட்டலும் என்றும் தொடரும்.

...தொடரும்

> **அன்றையச் சூழலில், அம்மையாரின் காட்டு தர்பாரில் அவர் எடுத்த முடிவுகளில், அவரைப் பின்வாங்கவைத்த நிகழ்வு என்றால், இராணி மேரி கல்லூரிப் போராட்டம்தான்.**

## திராவிட மாடல் ஆட்சியில், கவனம் ஈர்த்த திட்டக்குழு!

கடந்த ஐந்து ஆண்டுகளில், திராவிட மாடல் ஆட்சியில் திட்டக் குழுவின் சிறப்பான செயல்பாடுகள் குறித்து, பாலசுப்ரமணியன் முத்துசாமி எழுதிய பதிவு கவனம் ஈர்த்துள்ளது.

"தி.மு.க. ஆட்சிக்கு வந்த உடன் பேரா.ஜெயரஞ்சன் திட்டக் குழுவின் துணைத் தலைவராக நியமிக்கப்பட்டார். அவரது குழுவில் பல்வேறு துறைகளின் நிபுணர்கள் உள்ளே வந்தார்கள். கடந்த ஐந்து ஆண்டுகளில், பொதுவெளியில் வைக்கப்பட்ட திட்டக் குழுவின் முன்னெடுப்புகளில், நான்கு மிக முக்கியமானவை.

1. தி.மு.க. ஆட்சியின் முதல் மக்கள் நலத்திட்டமான விடியல் பயணத்தின் ஆய்வறிக்கை. இந்தத் திட்டத்தால் தமிழ்நாட்டின் பொதுப் போக்குவரத்தில் பெண்களின் பங்கு 40%-லிருந்து 70% ஆக உயர்ந்துள்ளது. பொதுப் போக்குவரத்தை உபயோகிக்கும் பெண்மணி, சராசரியாக மாதம் 880 ரூபாய் சேமிக்கிறார் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

2. முதலமைச்சரின் காலைச் சிற்றுண்டித் திட்டத்தால் மாணவர் வருகை சீராக மேம்பட்டது உறுதி செய்யப்பட்டிருக்கிறது. இவை தவிர, வாழ்க்கைத் தர மேம்பாடு, பள்ளியில் பிள்ளைகளின் கவனிக்கும் திறன் மேம்பாடு போன்ற தர மேம்பாடுகளும் (Qualitative improvements) ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

3. தமிழ்நாட்டின் அரசுப் பள்ளிகளின் கல்வித்தரம் தொடர்பான ஆசர் (Aser) அறிக்கைகளை முன்வைத்து, தமிழ்நாட்டின் கல்வித் தரம் பொதுவெளிகளில் கடும் விமரிசனத்துக்குள்ளானது. இதை விரிவாக ஆராய முடிவெடுத்தது திட்டக் குழு. தமிழ்நாட்டிலுள்ள அனைத்துப் பள்ளிகளிலும் இந்த ஆய்வை மேற்கொண்டு, 66% மாணவர்களைச் சோதிக்க முடிவெடுத்தது. இது தமிழ்நாட்டின் கல்வித் துறையில் ஒரு மைல்கல் எனச் சொல்லலாம். இதன்வழியே கல்வியில் பின்தங்கியிருக்கும் மாவட்டங்கள், பள்ளிகள், வகுப்புகள் போன்றவை, மிகத் துல்லியமாக அடையாளம் காணப்பட்டன. மேம்பாட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

4. 'மக்களைத் தேடி மருத்துவம்' திட்டத்தை, சென்னை மருத்துவக் கல்லூரியின் உதவியோடு ஆராய்ந்த திட்டக் குழுவின் ஆய்வறிக்கை, Lancet போன்ற மதிப்பு வாய்ந்த மருத்துவ இதழ்களில் விவாதிக்கப்பட்டு வருகிறது. இந்த நான்கு உதாரணங்களில், தமிழ்நாட்டின் திட்டக் குழு ஆய்வுகளின் உயர்தரம் வெளிப்படுகிறது என்பதை துறைசார் வல்லுநர்கள் ஒப்புக்கொள்வர்" என்று பதிவிட்டுள்ளார் அவர்.

## ஃப்ளாஷ்பேக்



ஏர்வாடி ராதாகிருஷ்ணன்



### "எப்போ பார்க்கணுமோ அப்ப பார்க்கிறதில்லை!"

2013-ஆம் ஆண்டில், முத்தமிழறிஞர் கலைஞரை, நீண்ட நாட்களுக்குப் பின்னர் சந்தித்தேன். உடன், கலைஞரின் தீவிர விசுவாசியான நண்பர்கள் ஜலால், கந்தசாமி ஆகியோரும் வந்திருந்தனர். "என்ன ஏர்வாடி ஆளயே காணோம், நீ கேட்டு சண்முகநாதன் நேரம் ஏதும் கொடுக்கலயா?" என்றார். அவரை அவ்வப்போது பார்த்துவிடும் பழக்கம் கொண்டவன் என்பதால், இந்தக் கேள்வியைக் கேட்டார் முத்தமிழறிஞர். "எப்போ பார்க்கணுமோ அப்ப பார்க்கிறதில்லை ஏர்வாடி" என்றவரிடம், "எப்ப பார்க்கணும்னு நினைக்கிறேனோ, அப்ப பார்க்க முடியிறதில்லையே அய்யா" என்றதும், "அதுவும் சரிதான்" எனப் புன்புறுவல் பூக்கும் பொன்னான தலைவர்.

**– கலைமாமணி ஏர்வாடி ராதாகிருஷ்ணன், கவிஞர், சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### முதல் உண்ணா நோன்பு!

1938-ஆம் ஆண்டு, ராஜாஜி ஆட்சியில் இந்தி கட்டாயப் பாடம் ஆக்கப்பட்டபோது, மே முதல் நாள் ராஜாஜியின் வீட்டின் முன்பு, தாலின் ஜெகதீசன் என்ற தொண்டர் உண்ணா நோன்புப் போராட்டத்தைத் தொடங்கினார். இந்தி எதிர்ப்புப் போராட்ட வரலாற்றில் முதன்முதலாக நோன்பு இருந்தவர் இவர்தான். அதன்பிறகு, ஒரு மாதம் கழித்து ஜூன் 1-ஆம் தேதிதான் தியாகராய நகரில் இருந்து சிவானந்த அடிகள் தலைமையில், ராஜாஜி இல்லம் நோக்கிப் பேரணி நடைபெற்றது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900